நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 187/2021

அரசு தரப்புக்காக அ. சா.3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குப்புசாமி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.4 | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

17th day of June 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.13 )

நான் தற்போது பண்ருட்டி எல்லார் பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 06.06.2021 ஆம் தேதி நான் எனது வீட்டிற்கு போவதற்காக நல்லான் தெரு வழியாக சென்று கொண்டிருந்தபோது ஏழுமலை வீட்டருகே போலிசார் நின்று படம் வரைந்து எழுதி கொண்டிருந்தார்கள். பக்கத்தில் யார் வீடு என்று எழுதி கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் பகல் 03.00 மணி இருக்கும். என்னையும் குமார் மகன் மணி என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கொரோனா காலத்தில் வீட்டை விட்டு யாரும் வெளியே செல்லக்கூடாது என்று சொன்னால் எங்கள் ஏரியாவில் லாக்டவுன் இல்லை. போலிசார் சொல்லிக்கொடுத்து இவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நல்லான் தெருவில் வீடுகள் பக்கம்

பக்கமாக இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டேன் என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து இவ்வாறு சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட  நேரம் 11.18)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.